## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (ஜுன்/ஜுலை - 2017)

## ED 3122 மாணவர் பொருத்தப்பாடும் ஆலோசனை வழங்கலும்

## (Students Adjustment and Counseling)

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் விரும்பிய இரு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் விரும்பிய ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

---

### பகுதி – I

01. அ) "கல்வியைப் பொருத்தமாகப் பெற்றுக்கொள்ள மாணவர்களின் பொருத்தப்பாடு முக்கியமானதாகும்." மாணவர் பொருத்தப்பாடு என்பதனால் நீர் விளங்கிக் கொள்வதனை உதாரணங்கள் மூலம் விளக்குக? (15 புள்ளிகள்)

ஆ) மாணவர்களின் பொருத்தப்பாட்டினைப் பொருத்தே கல்விச்செயற்பாடுகள் வெற்றியளிக்கும் என்பதற்கான ஆதாரங்களை முன்வைத்து, இன்றைய கல்வி முறைமைகளில் மாணவர்களின் பொருத்தப்பாட்டினைச் சீர்குலைக்கும் உளரீதியான தன்மைகளை ஆராய்க? (15 புள்ளிகள்)

02. அ) "பாடசாலைகளில் ஏற்றுக்கொள்ளப்படும் நடத்தைகளைப் பின்பற்றாத மாணவர்கள் பிழையான சீராக்கம் பெற்ற மாணவர்களாக கொள்ளப்படுவர்" பிழையான சீராக்கம் பெற்ற மாணவர்களின் (Maladjusted Students) நடத்தைப் பண்புகளை இனம் கண்டு விளக்குக? (10 புள்ளிகள்)

ஆ) மாணவர்கள் பிழையான சீராக்கம் பெறுவதற்கான காரணங்களை ஆராய்க? (10 புள்ளிகள்)

இ) பிழையான சீராக்கம் பெற்ற மாணவர்களிற்கு எவ்வாறான பரிகாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் கருத்துரைக்குக? (10 புள்ளிகள்)

03. அ) பாடசாலைகளில் வழங்கப்படும் தொழில் வழிகாட்டல் சேவையின் ஊடாக அடையப்படும் முக்கிய நோக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (15 புள்ளிகள்)

ஆ) கின்ஸ்பேக்கின் **(Ginsberg Theory)** தொழில் தேர்வு பற்றிய கொள்கையில் கற்பனைப் தெரிவுப்பருவம், அனுபவத்தின் மூலம் தெரிவு செய்யும் பருவம், யதார்த்தமாக தெரிவு செய்து கொள்ளும் பருவம் போன்றன பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க? (15 புள்ளிகள்)

## பகுதி II

4. "பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனை சேவையினை நிறுவும் போது இத்தேவைக்கு பொருந்தக்கூடிய ஒழுங்கமைப்பு முறைகளிலும், திட்டங்களிலும் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும்"

அ) ஒரு பாடசாலையின் நிலமைக்குப் பொருத்தமான வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை நிறுவும் போது பின்பற்றப்படும் ஆலோசனைச் சேவை கட்டமைப்புக்கள் தொடர்பாக ஆராய்க?

(10 புள்ளிகள்)

ஆ) பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் முக்கிய நோக்கங்களுள் கல்வி சார் வழிகாட்டலின் நோக்கங்கள், உடல் நலம்சார் வழிகாட்டலின் நோக்கங்கள் போன்றவற்றின் முக்கியத்துவங்களை விளக்குக?

(10 புள்ளிகள்)

இ) பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையில் பங்கு கொள்ளும் ஆளணியினரைக் குறிப்பிட்டு அவர்களின் பணி தொடர்பாக ஆராய்க?

(10 புள்ளிகள்)

ஈ) பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினால் மாணவரகள், ஆசிரியர், பெற்றோர் ஆகியோர் பெற்றுக்கொள்ளும் நன்மைகளைக் குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

05. அ) ஒரு மாணவன் தொடர்பான பிரச்சினைகள் இனங்காணப்பட்டதும் காலதாமதமின்றி வழிகாட்டல் ஆலோசனையை ஆரம்பித்தல் அவசியமானதாகும். இந்த வகையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் விஞ்ஞான முறையிலமைந்த ஆறு படிமுறைகளையும் எடுத்துரைக்குக?

(10 புள்ளிகள்)

ஆ) வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கென தகவல்களைச் சேகரிக்கும் நுட்ப முறைகளில் நேர்காணல் முறையினால் (Interview Method) கிடைக்கும் நன்மை மற்றும் தீமைகள் தொடர்பாக ஆராய்க?

(10 புள்ளிகள்)

இ) வழிகாட்டல் ஆலோசனை சேவை அணுகுமுறைகளின் தனியார் மையக் கொள்கை பெறும் முக்கியத்துவம் பற்றி விளக்குக?

(10 புள்ளிகள்)

ஈ)"இன்றைய சமூகச் சூழலில் வழிகாட்டல் ஆலோசனைசேவையின் தேவை அவசியமானதாகும்" இக்கூற்றினை நியாயப்படுத்துக?

(10 புள்ளிகள்)